கேட்கின்றார். நிரந்தரம் இல்லாதவர்கள், இத்தனை ஆண்டுக் காலமாக விட்டுவிட்டு இப்பொழுதுதான் கேட்டிருக்கின்றார்கள். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், அது ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே எத்தனை பேர் பணிபுரிந்தார்கள், எவ்வளவு ஆண்டுக் காலம் பணிபுரிந்திருக்கின்றார்கள் என்பதற்கான கணக்கெடுப்புப் பணி இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன், அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய ஆணை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, தனியார் சர்க்கரை ஆலையான சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பு விவசாயிகளுக்குப் பணம் தரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து உடனடியாக விவசாயிகளுக்குப் பணம் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 50, 60 சதவீதம் பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 405, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

405—

பேருந்து வசதி

***4403—திரு. க. மனோகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுகுன்றம்–மாமல்லபுரம் வழித்தடத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 மே 6

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருக்கழுகுன்றத்திலிருந்து மாமல்லபுரத்திற்குக் காலையில் 4 நடைகளும், மாலையில் 4 நடைகளும், அதேபோல் மாமல்லபுரத்திலிருந்து திருக்கழுகுன்றம் வழியாக செங்கல்பட்டுக்கு காலையில் 4 நடைகளும், மாலையில் 6 நடைகளும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு இயக்கப்படுகின்றன. பல்வேறு இடங்களிலிருந்து திருக்கழுகுன்றம் வழியாக மாமல்லபுரம் வரை 15 அரசுப் பேருந்துகள்மூலம் 90 நடைகளும், 8 தனியார் பேருந்துகள்மூலம் 34 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், மாமல்லபுரம்–செய்யாறு–வழி திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் என்ற புதிய வழித்தடத்தின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 31–3–2012 முதல் 4 நடைகள் காலை மற்றும் மாலை வேளைகளில் இயக்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 406, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

406—

மாணவியர் விடுதி

*__14981__—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?